பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 29 சனிக்கிழமை 12.02.2022 கதிர் 325

## பெப்ரவரி 22 முதல் 25 வரை நாடாளுமன்றக் கூட்டங்கள்

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை எதிர் வரும் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனச் சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்தன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழகத்தை முடக்கியது மாணவர் குழு!

### புதிய கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரை அங்கீகரிக்குமாறு வலியுறுத்து





யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வாயில்களை முடக்கிய மாணவர் குழு ஒன்று இன்று காலை முதல்போராட்டத்தில் ஈடுபட்டது.

2

## 'மொட்டு' கூட்டணி பங்காளிகள் விமலின் வீட்டில் அவசர சந்திப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அவசர சந்திப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸவின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

2

## 'மொட்டு' கூட்டுக்குள் பெரும் குழப்பம்; புதிய அணிகள் உருவாகும் சாத்தியம்

இலங்கை அரசியலில் முத்தரப்புக் கூட்டணிகளின் உருவாக்கங்களை விரைவில் காணமுடியும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச கூட்டணிக்குள் தற்போது குழப்பம் ஏற்பட்டுள்ளது. பங்காளிக் கட்சிகள், தமது அதிருப்தியை அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றன.

அத்துடன் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர். இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவும் பதவி துறக்கத் தயாராகிவிட்டார். அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மாநாட்டில் அரச பங்காளிக் கட்சிகள் பங்கேற்காமையானது, பங்காளிக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள விரிசலைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உடைவை விரைவில் எதிர்பார்க்க முடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிவழி செல்லக்கூடும் எனவும், ஏனைய கட்சிகள் இணைந்து புதிய கூட்டணியை அமைக்கலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வாசுவுக்கு பஸில் அழைப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் முழுமையாக இணையுங்கள். தொகுதி அமைப்பாளர் பதவியைத் தருகின்றேன்.

- இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்காரவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

ஆளுங்கட்சிக் குழுக் கூட்டத்தின் போது, இரத்தினபுரி மாவட்டத்தில்

2

## பிரதமரின் செயலருக்கு கொரோனாத் தொற்று



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் டி.எம். அநுர திஸாநாயக்க கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பிரதமரின் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கை நிர்வாக சேவையில் சிரேஷ்ட அதிகாரியான டி.எம். அநுர திஸாநாயக்க, இதற்கு

2

## சஜித் - சம்பிக்கவை இணைக்க சிரேஷ்ட உறுப்பினர்கள் முயற்சி



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும், சம்பிக்க ரணவக்கவையும் நேரில் சந்திக்க வைத்து முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி கைகூடவில்லை என்று தெரிய வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கும் திட்டத்தில் இருந்த முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, திடீரென '43ஆம் படையணி' எனும் அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார். குறித்த இயக்கத்தின் மாநாட்டையும் பெருமெடுப்பில் நடத்தியுள்ளார்.

2024இல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு

2

## தாதியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோட்டா பணிப்பு

நாட்டின் தற்போதைய நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, முழு அரச சேவையும் பாதிக்காதவாறு தாதியர்களின் அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

2




## கிழக்கில் ஹக்கீம், ரிஷாத் கட்சிகளுடன் சஜித் அணி இனிமேல் கூட்டணி இல்லை

### ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. திட்டவட்டம்



எந்தவொரு தேர்தலாயினும் எதிர்வரும் காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி கிழக்கு மாகாணத்தில் தனித்தே போட்டியிடும் என்று கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனிவரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி விட்ட தவறுகளை ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் செய்யமாட்டாது.

2

## வாசுவுக்குப் பஸில் அழைப்பு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனது தொகுதியில் எனக்குத் தேவையான ஒரு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை நியமிக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார். அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் இந்தக் கருத்தை ஆமோதித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் சரத் வீரசேகர, நியமனம் என்பது முறையாக நடக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தமக்குத் தேவையான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவரை நியமித்துக் கொள்வது வழமை. அது எந்த ஆட்சியாக இருந்தாலும் அப்படித்தான் நடக்கும் என்று பஸில் அவ்வேளை குறிப்பிட்டுள்ளார். பஸிலின் கருத்துடன் பிரதமரும் உடன்பட்டுள்ளார்.

இவ்வேளையிலேயே, அமைச்சர் வாசு, நீங்கள் எங்கள் பக்கம் முழுமையாக வாருங்கள். உங்களுக்குத் தொகுதி அமைப்பாளர் பதவியைத் தருகின்றேன் என்று பஸில் சிரித்தபடி கூறியுள்ளார்.

## சஜித் - சம்பிக்கவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தே சம்பிக்க இவ்வாறு செயற்படுகின்றார் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. சம்பிக்கவின் சில நகர்வுகளால் அவர் மீது சஜித்தும் கடும் அதிருப்தியில் இருக்கின்றார்.

மாநாட்டின் பின்னர் சம்பிக்கவை சஜித் வெளிப்படையாகவே விமர்சிக்க ஆரம்பித்துள்ளார். இந்நிலை, தொடருமானால் எதிரணி பலவீனமடையும், இரண்டாக உடையும் என்பதால் இவ்விருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் இறங்கியுள்ளனர்.

எனினும், அந்த முயற்சி இன்னும் கைகூடவில்லை எனத் தெரியவருகின்றது.

## பிரதமரின் செயலருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளதோடு, பல்வேறு அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளையும் வகித்துள்ளார்.

## தாதியர்களின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தாதியர்களுக்கான பல்கலைக்கழகம் நிறுவுதல், பதவி உயர்வு, பணி நேரம் குறைத்தல், போக்குவரத்துக் கொடுப்பனவு, சீருடை கொடுப்பனவு மற்றும் மேலதிக சேவை கொடுப்பனவு வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

## கிழக்கில் ஹக்கீம், ரிஷாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிலுள்ள 160 தொகுதிகளுக்கும் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அந்தந்தத் தொகுதி அமைப்பாளர்களே பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாக நியமிக்கப்படுவர்.

கட்சி சம்பந்தப்பட்ட எந்த வேலைத் திட்டமாயினும் அமைப்பாளர் ஊடாகவே முன்னெடுக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகள் எம்முடன் இணைந்து எமது வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்டு, எமது ஆதரவாளர்களினதும் வாக்குகளைப் பெற்று, வெற்றி பெற்ற பின்னர் அவர்கள் அரசில் இணைந்து விடுகின்றனர்.

இதனால் நாடாளுமன்றத்தில் எமது கட்சியின் பலம் மலினப்படுத்தப்படுகின்றது. மாற்றுக் கட்சியினருக்கு வாய்ப்பளிப்பதால் எமது கட்சி ஆதரவாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இனிவரும் எந்தவொரு தேர்தலிலும் இவ்வாறான தவறுகள் நடக்க இடமளிக்க மாட்டோம் என்று உறுதியளிக்கின்றேன். இந்த விடயத்தில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மிகவும் உறுதியாக இருக்கின்றார் – என்றார்.

## 'மொட்டு' கூட்டணி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பாரதூரமான பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இதனடிப்படையில், அந்தப் பிரச்சினைகள் தொடர்பில் யோசனைகளைத் தயாரித்து எதிர்வரும் 2ஆம் திகதி அரசிடம் கையளிக்க இந்த அணியினர் தீர்மானித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக மற்றுமொரு சந்திப்பை அமைச்சர் விமல் வீரவன்ஸ அல்லது உதய கம்மன்பில ஆகியோரின் வீட்டில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மாணவர் ஒருவரை பல்கலைக்கழக நிர்வாகம் அங்கீகரிக்க மறுக்கின்றது எனத் தெரிவித்தே குறித்த நடவடிக்கை மேற்படி மாணவர்கள் குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழகப் பேரவையால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்ட ஒருவரை மாணவர் ஒன்றியத் தலைவராக அங்கீகரிக்க முடியாது என்று பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே நீண்டகாலமாக மாணவர் ஒன்றியத் தலைவர் பதவி வெற்றிடமாக உள்ளமையாலேயே புதிய தலைவரைப் பல்கலைக்கழக நிர்வாகத்தின் பங்களிப்பு இன்றி தெரிவு செய்ததாகப் பல்கலைக்கழகத்தை முடக்கிய மாணவர்களில் ஒருவர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

குறித்த முடக்கத்தால் ஆயிரக்கணக்கான மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் இராமநாதன் வீதியில் இன்று காலை நின்றனர். பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வாடகைக்கு




தொடர்புகளுக்கு:-
076 307 8091, 074 077 1013

Global Lifestyle Lanka

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை நிராகரிப்போம், மாசுபாட்டை தடுப்போம்..

"சுவாசமில்லாத சூழல்" சுற்றுச்சூழல் அழிவைத் தடுப்பது நம் அனைவரின் பொறுப்பாகும், மேலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது இன்றியமையாதது.

சுற்றுச்சூழலுக்கு அதிக அளவில் சேர்க்கப்படும் பாலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்குகள்தான் இன்று சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு முக்கிய காரணமாக உள்ளது. இது மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கட்சிகளுக்குள் நெருக்கடி

நாட்டின் அரசியல் நிலைமைகள், சூழல்கள் சகல அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டுகள் மத்தியிக் குழப்பங்கள், பிளவுகள், பிரிவுகளை ஏற்படுத்தும் சூழ்நிலையைத் தந்து நிற்கின்றன என்று அவதானிகள் கூறுகின்றனர்.

அனைத்துக் கட்சிகளுக்குள்ளும் குழப்பம். கூட்டுகளுக்குள்ளும் பிளவு. முன்னெப்போதும் இல்லாத அரசியல் களச்சூழல் இன்று. விநோதமான, விபரீதமான நிலைமை.

ஆளும் மொட்டுக் கட்சிக் கூட்டமைப்புக்குள்தான் பெரும் குழப்பம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். நிறைவேற்றதிகாரம் என்ற அதிகார மூடைக்குள் நெல்லிக்காய்கள் போல கட்சிகள், எம்.பிக்கள் எல்லோரும் கட்டுண்டு கிடக்கின்றனர். எப்போதும் மூடை அவிழும், நெல்லிக்காய்கள் சிதறும் என்று தெரியாத நிலைமை.

மொட்டுக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் மட்டுமல்ல, பிரதான தரப்பான ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கட்சிக்குள்ளேயே முறுகல் உச்சம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். ஆட்சித் தலைமையால் தாங்கள் நடத்தப்படும் முறைமை தொடர்பில் கட்சியின் எம்.பிக்கள் பலர் விசனமுற்றிருக்கின்றனர் என்று தகவல்கள் கசிகின்றன. ராஜபக்ஷக்களுக்கு – குறிப்பாக பஸில் ராஜபக்ஷவுக்கு – நெருக்கமானவர் எனக் கருதப்படும் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸவே முறுகிக் கொண்டு வெளியேறும் நிலைமை.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸாவுக்கும் மற்றொரு பிரமுகருமான சம்பிக்க ரணவக்கவுக்கும் உள்ள முறுகலும் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. இருவரும் ஒரணியில் ஐக்கியமாக நீடிப்பது இனி சாத்தியமில்லை என்றே தோன்றுகின்றது. இதனால் சம்பிக்க ரணவக்க புதிய எதிரணிக் கூட்டு ஒன்றை ஆரம்பிக்கும் இலக்குடன் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், தமது புதிய கட்சிக்கு அங்கீகாரம் பெற்றுள்ள குமார வெல்கமவுடனும் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

இதேசமயம் ஆளும் கூட்டமைப்பின் இரண்டாவது பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஆளும் கூட்டமைப்பிலிருந்து வெளியேற முஸ்தீபுகள் செய்து வருகின்றன. அதன் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன பிற கட்சிகள் சிலவற்றுடன் சேர்ந்து புதிய கூட்டு ஒன்று அமைத்துக் கொண்டு, இனிவரும் தேர்தல்களை எதிர்கொள்ளலாம் என்ற கணக்கில் இருக்கின்றார்.

ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள மற்றைய பத்து கட்சிகளில் – சிறிய கட்சிகள் – பலவும் ஆளும் தரப்பிலிருந்து வெளியேறுவது குறித்து சிந்திக்கின்றன.

ஆளும் தரப்பின் செல்வாக்கு மோசமாகப் பின்னடைவு கண்டிருக்கும் நிலையில் இவ்வாறு ஒட்டுண்ணிகள் கழறுவது எதிர்பார்க்கப்படும் ஒன்றுதான்.

முஸ்லிம் கட்சிகளிலும் அதுதான் நிலைமை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீமினதும், இலங்கை மக்கள் காங்கிரஸில் அதன் தலைவர் ரிஷாத் பதியுதீனினதும் அதிகாரம் – வலிமையான பிடி – கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. அதனால் அவற்றுக்குள்ளும் பிரிவும் பிளவும் தவிர்க்க முடியாதனவாகவே தோன்றுகின்றன.

தமிழ்க்கட்சிகள், மலையகக் கட்சிகளின் கூட்டுகளுக்குள்ளும் நிலைமை இவற்றுக்குப் புறம்பானதே அல்ல.

மூக்கு இருக்கும் வரை சளி இருப்பது போல் கட்சிகள் அரசியலில் நீடிக்கும் போது இவ்வாறு பிளவுகள், பிரிவுகள், கால்வாரல்கள், இடறல்கள், முரண்பாடுகள் நீடிக்கவே செய்யும்.

# மாகாண சபை முறைமைகள் புதிய அரசமைப்பில் இருக்கா!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டு




புதிய அரசமைப்பில் மாகாண சபை முறைமைகள் இருக்கா எனத் தாம் எதிர்பார்ப்பதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற அனைத்து தமிழ் கட்சிக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எம்மிடம் இருக்கின்ற சிலவற்றைக் காப்பாற்ற நினைக்கும்போது அரசாங்கம் தமிழ் மக்களிடம் உள்ள எல்லாவற்றையும் பறிக்க முயற்சி செய்கின்றது எனக் குற்றம் சாட்டினார்.

இதன் காரணமாகவே 13 ஆவது திருத்தம் வேண்டும் என இந்தியாவிடம் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இணைந்து கோரிக்கை விடுத்தன என்றும் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார். ஆகவே, இருப்பைத் தக்க வைப்பதற்கு 13 ஆவது திருத்தம் அவசியமே அன்றி அது ஒருபோதும் தீர்வாகாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களை புலிகளாக காட்ட அரசு முயற்சி!

## சித்தார்த்தன் எம்.பி. குற்றச்சாட்டு



இலங்கை தொடர்பான ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை இம்முறை அரசாங்கத்துக்கு எதிராகக் கடுமையாக இருக்கும் என புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஏற்கனவே கடிதம் ஒன்றை சக நாடுகளுக்கு அனுப்பியுள்ள நிலையில் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஐ.நாவுக்கு கடிதங்களை அனுப்பவுள்ளன எனக் கூறினார்.

ஒன்றிணைந்து கடிதம் அனுப்புவதற்கு கால அவகாசம் எடுக்கும் என்பதாலேயே தனியாகவே கடிதங்களை தமிழ் பேசும் கட்சிகள் அனுப்பவுள்ளன எனத் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்துக்கு ஆதரவாக விடயங்களைத் திரட்டும் முகமாகவே அமைச்சர்கள் அலி சப்ரி, ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் வடக்கில் நீதிச் சேவை முகாம்களை மேற்கொண்டனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

அதிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை முன்னாள் போராளிகளாகக் காட்டுவதற்கு பெரும் முயற்சியை அவர்கள் எடுத்து வருகின்றனர் என்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

# பொது இடங்களில் தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவது தொடர்பாக அறிவிப்பு!

பொது இடங்களில் தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்கும் தீர்மானத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

மேலும், கொள்கை முடிவுகளின் அடிப்படையில் இந்த அட்டை கட்டாயமாக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

அதன்படி, எந்த இடங்களில் தடுப்பூசி அட்டை கட்டாயம் என்பதை அமைச்சு எதிர்காலத்தில் முடிவு செய்யும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கையடக்கத் தொலைபேசி விண்ணப்பம் மற்றும் முழுமையான தடுப்பூசி நிலைக்கான கி.யு.ஆர். குறியீடு என்பன 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும் எனத் தொழில்நுட்ப அமைச்சு அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். மேலும், அந்த நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் தடுப்பூசி அட்டையைக் கட்டாயமாக்கும் தீர்மானம் அமுல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# 48 மணித்தியாலங்களுக்கு மேலாக காய்ச்சல் நீடித்தால் உடனடியாக வைத்தியரை நாடவும்




ஒமிக்ரோன், டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் ஆகியன சமூகத்தில் மிக வேகமாகப் பரவி வருகின்றன என சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக 48 மணித்தியாலங்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபர்கள் தமக்கு எந்த வகையான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என்ற முடிவுகளை தாமாகவே எடுத்துக்கொள்கின்றனர் என்றும் அதனைவிடுத்து மருத்துவ உதவியை நாடுவதே சிறந்ததென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொரோனாத் தடுப்பூசி தொடர்பான கட்டுக்கதைகள் மற்றும் வதந்திகளை நம்பாமல் அனைவரும் விரைந்து பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

# ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு குறையவில்லை; ஜோ பைடன் எச்சரிக்கை!



உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட்டிருந்த தனது படைகள் பயிற்சிகளை முடித்து தங்களது வழமையான தளங்களுக்கு திரும்புகின்றன என ரஷ்யா தெரிவித்துள்ளபோதும், உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்துவதற்கான சந்தர்ப்பங்கள் இன்னும் மிக அதிகமாகவே உள்ளன என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறானஒருபோர்இடம்பெற்றால் அதற்கு மிகப் பெரும் விலைகளை கொடுக்க வேண்டியேற்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

தொலைக்காட்சி ஒன்றில் நேற்று கருத்து வெளியிட்ட பைடன், உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் அதற்கு தீர்க்கமாக பதிலளிக்க அமெரிக்கா தயாராக இருப்பதாக கூறினார்.

உக்ரைன் எல்லையில் ரஷ்யா தற்போது சுமார் 150,000 துருப்புக்களை குவித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பைடன் குறிப்பிட்டார்.

எல்லையில் இருந்து குறிப்பிடத்தக்க அளவுபடைகளைவாபஸ்பெற்றுள்ளதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும் இது உறுதிசெய்யப்படவில்லை. உண்மையில், ரஷ்யப் படைகள் இன்னும் அச்சுறுத்தும்நிலையில்இருக்கின்றன எனஎங்கள்புலனாய்வாளர்கள்குறிப்பிடுகின்றனர் என அவா தெரிவித்தார்.

தனது பாதுகாப்பு தொடர்பான மொஸ்கோவின் கவலைகளை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறிய சில மணி நேரங்களுக்கு பிறகு பைடனின் இவ்வாறான கருத்து வெளியாகியுள்ளது.

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு முயற்சி குறித்த குற்றச்சாட்டுக்களை புடின் தொடர்ந்து மறுத்து வந்ததோடு, ஐரோப்பாவில் இன்னொரு போரை ரஷ்யா விரும்பவில்லை என்றும் கூறினார். எனினும் நவம்பர் முதல் பதற்றம் அதிகரித்து வருகிறது.

முன்னாள் சோவியத் குடியரசாகிய உக்ரைனுடன் ரஷ்யா ஆழமான கலாசார மற்றும் வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளது. மேற்கத்திய நேட்டோ இராணுவக் கூட்டணியில் உக்ரைன் சேரப்போவதில்லை என்ற உத்தரவாதத்தை பெற புடின் விரும்புகிறார். நேட்டோவில் உக்ரைன் இணைவது ரஷ்யாவிற்கு அச்சுறுத்தலாக அமையும் என அவர் கருதுகிறார்.

இந்நிலையில் நேட்டோவில் உக்ரைன் இணையாது என்ற சட்டபூர்வமான உத்தரவாதத்தை அமெரிக்கா மற்றும் நேட்டோவிடம் புடின் கோருகிறார். எனினும் இத்தகைய உத்தரவாதத்தை வழங்க அமெரிக்காவும் நேட்டோவும் மறுத்துவிட்டமை குறிப்பிடத்தக்கது




# ஐரோப்பாவில் சிக்கினார்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்கள்

ஐரோப்பாவில் போதைப்பொருள் வலைமைப்பைக் குறிவைத்து நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் 45 பேரைக் ஐரோப்பிய காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இலத்தீன் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பியத் துறைமுகங்கள், சரக்கு விமானங்கள், தனியார் ஜெட் விமானங்கள், கப்பல் கொள்கலன்களைப் பயன்படுத்தி ஹொக்கெய்ன் போதைப்பொருளைக் கடத்தியதாக கைது செய்யப்பட்டவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் அல்பேனிய மொழி பேசும் போதைப்பொருள் கடத்தும் வலையமைப்பில் இக்குழுவும் ஒன்று என்று யூரோப்போல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

600 க்கும் மேற்பட்ட சட்ட அமுலாக்க அதிகாரிகள், சட்டவாளர்கள் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் ஸ்பெயின் மற்றும் பெல்ஜியத்தில் இந்த வலையமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக சோதனைகளை நடத்தியிருந்தனர்.

பிரஸ்ஸல்ஸ் மற்றும் ஆண்ட்வெர்ப் துறைமுக நகரைச் சுற்றி 49 தேடல்கள் உட்பட ஐரோப்பா முழுவதும் 80இற்கும் மேற்பட்ட இடங்களில் சோதனைகள் நடந்தன.

பெல்ஜிய பெடரல் வட்டவாளர் அலுவலகம் 30 பேர் கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்தியது.

தேடுதலில் ஒரு பெரிய அளவிலான அசிட்டோன், பல கிலோ கணக்கான கஞ்சா மற்றும் போலி காவல்துறை சீருடைகள் பெல்ஜியத்தில் கைப்பற்றப்பட்டன.

பெல்ஜியம், குரோஷியா, ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ஸ்பெயின் உட்பட ஏழு நாடுகள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

ஒவ்வொருநாளும்ஆயிரக்கணக்கான கப்பல் கொள்கலன்கள் ஆண்ட்வெர்ப்பை அடைகின்றன.

பெல்ஜியம் ஐரோப்பாவிற்குள் போதைப்பொருள் கடத்தும் ஒரு முக்கிய மையமாக மாறியுள்ளது.

இக்குழு போதைப்பொருள் விற்பனையில்வரும்இலாபங்களைபல்வேறு நாடுகளில் நிறுவனங்களை அமைத்து பணத்தை வெள்ளையாக்குகின்றது என யூரோப்போல் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது

# ரஷ்யா படைகளை நகர்த்துவதாக கூறுவது பொய் என்கிறார் அமெரிக்கா அதிகாரி



உக்ரைனுடனான எல்லையில் இருந்து துருப்புக்களை நகர்த்துவதாக ரஷ்யா வெளியிட்ட கருத்து தவறானது என சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சமீபத்திய நாள்களில் எல்லையில் மேலதிகமாக 7,000 துருப்புக்கள் களமிறக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். ஏதேனும் ஒரு சாக்குப்போக்கை கூறி உக்ரைனை எந்த நேரத்திலும் ஆக்கிரமிக்க ரஷ்யா தயாராக உள்ளது எனவும் சர்வதேச ஊடகங்களிடம் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இராணுவப் பயிற்சிகள் நிறைவடைந்ததையடுத்து உக்ரைன் எல்லையில் இருந்து தனது படைகளை முந்தைய தளங்களுக்கு நகர்த்துவதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்தது. உக்ரைனிடமிருந்து 2014 இல் ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியாவில் இருந்து யுத்த தாங்கிகள் வெளியேறுவதைக் காட்டும் வீடியோவை நேற்று புதன்கிழமை ரஷ்யபாதுகாப்புஅமைச்சுவெளியிட்டது.

எனினும் ரஷ்யா தனது படைகளை நகர்த்துவதற்கான எந்த ஆதாரமும் இல்லை என மேற்குலக நாடுகள் தெரிவித்து வருகின்றன. சமீபத்திய நாள்களில் ஆயிரக்கணக்கான மேலதிக துருப்புக்கள் உக்ரைன் எல்லைக்கு வந்துள்ளன. நேற்று புதன் கிழமையும் மேலதிக துருப்புக்கள் வந்துள்ளன என வெள்ளை மாளிகை சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார். இதேவேளை, உக்ரைன் எல்லையில் இருந்து ரஷ்ய துருப்புக்கள் திரும்புகின்றன என வெளியான அறிவிப்பை மட்டுமே நாங்கள் கேள்வி யுற்றோம். ஆனால் அதற்கான நம்பத் தகுந்த ஆதாரங்கள் இல்லை என உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நேற்று கூறினார். இவ்வாறான நிலையில் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு முயற்சி குறித்த குற்றச்சாட்டுக்களை புடின் தொடர்ந்து மறுத்து வந்ததோடு, ஐரோப்பாவில் இன்னொரு போரை ரஷ்யா விரும்பவில்லை என்றும் கூறினார். எனினும் நவம்பர் முதல் பதற்றம் அதிகரித்து வருகிறது.

முன்னாள் சோவியத் குடியரசாகிய உக்ரைனுடன் ரஷ்யா ஆழமான கலாசார மற்றும் வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளது. மேற்கத்திய நேட்டோ இராணுவக் கூட்டணியில் உக்ரைன் சேரப் போவதில்லை என்ற உத்தரவாதத்தை பெற புடின் விரும்புகிறார். நேட்டோவில் உக்ரைன் இணைவது ரஷ்யாவிற்கு அச்சுறுத்தலாக அமையும் என அவர் கருதுகிறார். இந்நிலையில் நேட்டோவில் உக்ரைன் இணையாது என்ற சட்டபூர்வமான உத்தரவாதத்தை அமெரிக்கா மற்றும் நேட்டோவிடம் புடின்கோருகிறார். எனினும்இத்தகைய உத்தரவாதத்தை வழங்க அமெரிக்காவும் நேட்டோவும் மறுத்துவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனின் பாதுகாப்புத்துறை இணையதளத்தில் ரஷ்யா ஊடுருவியுள்ளதாக குற்றச்சாட்டு

உக்ரைன் நாட்டின் பாதுகாப்புத்துறை இணையதளம் மற்றும் வங்கிகளின் இணையதளங்கள் மீது சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியாகியுள்ளது.

உக்ரைன் எல்லையில் கடந்த சில நாள்களாகவே போர்ப் பதற்றம் நிலவிவருகிறது.

நேற்றைய தினம், ரஷ்யா தன் படைகளில் ஒரு பகுதியைத் திரும்பப் பெற்றுக்கொண்டதாகவும், போர் செய்வதற்கு விரும்ப வில்லை என்றும் தகவல் தெரிவித்தது. இந்த நிலை யில், உக்ரைனின் தகவல் பாதுகாப்பு மையம் இது குறித்துக் கூறியதாவது, ரஷ்யாவைச் சேர்ந்த சைபர் குழு உக்ரைனின் பெரிய இரண்டு அரசு வங்கிகள் உட்பட குறைந்தது 10 இணையதளங்களை ஹக் செய்துள்ளது. உக்ரைன் அரசுக்குச் சொந்தமான மிகப் பெரிய வங்கி ஒன்லைன் கட்டணங்கள் செலுத்துவது மற்றும் வங்கி பயன்பாடுகளில் சிக்கல் இருப்பதாக வங்கி பயனாளர்கள் புகாரளித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

உக்ரைனில் முடக்கப்பட்ட இணையதளத்தைத் மீட்க அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், உக்ரைனின் இணையத்தளங்கள் மீது நடத்தப்பட்ட சைபர் தாக்குதல்களுக்கும் ரஷ்யாவுக்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும் தாம் அந்த தாக்குதலை மேற்கொள்ள வில்லை என எனவும் ரஷ்யா தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# உக்ரைனில் இருந்து இந்தியா வருவதற்கான விமானக் கட்டணம் மூன்று மடங்கு உயர்வு



நேட்டோ படையில் உக்ரைன் சேருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் ரஷ்யா, உக்ரைன் எல்லையில் திடீரென படைகளைக் குவித்தது. இதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்ததோடு, ரஷ்யா உக்ரைனைத் தாக்கினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் எச்சரித்தது.

இந்த பதற்றமான சூழ்நிலையில் உக்ரைனில் உள்ள இந்தியர்களை பாதுகாக்கவும், அவர்களை பத்திரமாக மீட்டு வரவும் இந்திய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. ரஷ்யா- உக்ரைன் நாடுகளுக்கு இடையே நிலவும் போர்ப் பதற்றம் காரணமாக உக்ரைன் நாட்டில் இருந்து இந்தியர்களை வெளியேறும் படியும் இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

உக்ரைனில் தங்கியிருக்க வேண்டிய கட்டாயம் இல்லாத மாணவர்கள் உட்பட அனைவரும் வெளியேறும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியர்கள் யாரும் மிக அவசிய தேவைகளின்றி உக்ரைனுக்கு செல்லவேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் உக்ரைனில் உயர்கல்வி பயில சென்ற இந்திய மாணவர்களை அங்கிருந்து சொந்த நாட்டுக்கு அழைத்து வர கூடுதல் விமானங்களை இயக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் கேரளா, ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் உக்ரைனில் தங்கி மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கல்விபயின்று வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் இப்போது இந்தியா திரும்ப ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஆனால், இந்தியா திரும்புவதற்கான விமானக் கட்டணங்கள் தற்போது மிக அதிகளவில் அதிகரித்து இருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். 25 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரமாக இருந்த விமானக் கட்டணம் தற்போது 70 ஆயிரம் ரூபா முதல் 80 ஆயிரமாக அதிகரித்து இருப்பதாக அங்குள்ள மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் பற்றி இந்திய மத்திய அமைச்சர் முரளீதரனிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, உக்ரைனில் தங்கி உள்ள இந்தியர்களை அழைத்து வர ஏற்பாடு செய்து வருகிறோம். இது தொடர்பாகவிமானநிறுவனங்களுடன்பேச்சுவார்த்தை நடந்து வருகிறது, என்று அவர் பதிலளித்திருக்கிறார்.

## நீட் தேர்வை ரத்துச் செய்வதற்கான வழிமுறையேதும் முதலமைச்சருக்கு தெரியவில்லையென குற்றச்சாட்டு



தேனி மாவட்டம் போடியில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும்சட்டமன்றஎதிர்க்கட்சிதுணைத்தலைவருமான ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 505 வாக்குறுதிகளை கண்டிப்பாக நிறைவேற்றுவோம் என தி.மு.க. தெரிவித்தது. ஆனால், தற்போது வரை பெரும்பாலான வாக்குறுதிகளை தி.மு.க வால் நிறைவேற்ற முடியவில்லை.

குறிப்பாக, ஆட்சிக்கு வந்தவுடன் தனது முதல் கையெழுத்து நீட் தேர்வை ரத்து செய்வதற்காகதான் இருக்கும் என்று மு.க.ஸ்டாலின் கூறினார். ஆனால், தற்போது வீட்டில் இருந்து கொண்டு கையெழுத்துப்போட்டு வருகிறார். தேர்தல் பிரசாரத்துக்குக்கூட வராமல் காணொலி மூலம் பிரசாரம் செய்கிறார். நீட் தேர்வை ரத்துச் செய்வதற்கான வழிமுறை அவருக்கு தெரியவில்லை.

விவசாயிகளுக்கு 5 பவுனுக்கு கீழ் உள்ள நகைக்கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வதாகக் கூறிவிட்டு 50 லட்சம் பேரில் 13 லட்சம்பேருக்குமட்டுமேதள்ளுபடிசெய்யப்பட்டுள்ளது. பொய்யான வாக்குறுதிகளை அளித்ததில் மக்கள் தி.மு.க. மீது கோபத்தில் உள்ளனர். எப்போதும் அ.தி.மு.கவினர் மக்களுக்குக் கொடுப்பவர்கள். தி.மு.க. மக்களிடம் இருப்பதை எடுப்பவர்கள்.

10 மாத கால தி.மு.க. ஆட்சியில் ஒரு முன்னேற்றம்கூட தமிழகத்தில் ஏற்படவில்லை. யாருடைய ஆட்சி நல்லாட்சி என்பதை மக்கள் எடைபோட்டு வாக்களிக்க வேண்டும், என்று தனது உரையில் ஓ.பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.

## எடப்பாடி ஜெயிலுக்கு போவார் பிரசாரத்தில் உதயநிதி தெரிவிப்பு

சேலம் மாவட்டம் ஆத்தூர் சந்தைப்பேட்டை பகுதியில் தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து தி.மு.க. மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் எம்.எல்.ஏ., பிரசாரம் செய்தார்.

மக்களுடைய எழுச்சியைப் பார்க்கும்போது நீங்கள் தி.மு.க. வேட்பாளர்கள் அனைவரையும் ஜெயிக்க வைப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. சேலத்துக்கு நாங்கள் எப்போது வந்தாலும் இதே வரவேற்புத்தான். கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு வரும்போதும் இதே அளவுக்கு எழுச்சியோடு வரவேற்பு கொடுத்தீர்கள். தி.மு.க. வேட்பாளர்களை எல்லாம் வெற்றிபெற வைப்போம் என தெரிவித்தீர்கள். 11 சட்டமன்ற தொகுதிகளில் எத்தனை தொகுதியில் வெற்றி பெற்றோம்? இது நியாமா?. இந்தத் தவறை மீண்டும் செய்வீர்களா?, என்று அவர் அங்கே உரையாற்றுகையில் கேள்வியெழுப்பினார். ஒட்டுமொத்த தமிழகத்திலும்தி.மு.கவை நம்முடைய தலைவர் வெற்றிபெற வைத்தார். நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. தி.மு.க. ஆட்சி அமைந்து 9 மாதங்கள் ஆகின்றன. அப்போது கொரோனா இரண்டாவது பேரலை. மிகப் பெரிய ஆபத்தானதொரு சூழ்நிலையில்தான் தி.மு.க. ஆட்சி அமைத்தது.

அதற்கு முன்பு, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொரோனா முதல் அலையில் அ.தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட ஒரு கோடி தடுப்பூசிகளை வீணடித்தார்கள். மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவே இல்லை. ஆனால், தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு தி.மு.க. தலைவரின் சீரிய முயற்சி யால் 9 மாதங்களில் கிட்டத்தட்ட 10 கோடி



தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. அதுதனாலும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தியதாலும் ஒரு மாதத்திற்கு முன்புவந்த மூன்றாவது அலையையும் கட்டுப்படுத்த முடிந்தது. எடப்பாடி பழனிசாமியின் நண்பர் இளங் கோவன், பணத்தைப்பெற்றுக் கொண்டு, வீடுகளே இல்லாத பகுதிகளுக்கு தார் சாலை அமைத்துக் கொடுத்துள்ளார். அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் அவரும் எடப்பாடி பழனிசாமி உள்பட அனைவரும் ஜெயிலுக்குள் போய் கம்பி எண்ணுகிற சூழ்நிலை வரும். எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி இரு நாள்களாக தனது பிரசாரத்தில் சட்டமன்றத்தை முடக்கப் போவதாக சொல்கிறார். எடப்பாடி பழனிசாமி ஆட்சி அமைத்த மாதிரி நாங்கள் கூவத்தூர் போய், சசிகலாவின் காலில் விழுந்து ஆட்சியைப் பிடிக்கவில்லை. நாங்கள் மக்களிடத்தில்தான் வாக்குறுதி கொடுத்து மக்களைச் சந்தித்து, மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சி அமைத்திருக்கிறோம், என்றும் உதயநிதி ஸ்டாலின் தனது பிரசாரத்தின்போது குறிப்பிட்டார்.



## இலங்கையைச் சேர்ந்த படகு ஆந்திர கடலோரத்தில் மீட்பு

ஆந்திர மாநிலம், குண்டூர் மாவட்டம், நிஜாம்பட்டினம் துறைமுகப் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்றவர்களால் பாதி மூழ்கிய நிலையிலிருந்த படகொன்று மீட்கப்பட்டுள்ளது. அதில் யாரும் இல்லாதமையால் துறைமுகத்தில் உள்ள பொலிசார், கடலோரக் காவல்படை, மீன்வளத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு அவர்கள் தகவல் தெரிவித்தமையையடுத்து, மூழ்கியிருந்த படகு கடற்கரைக்கு கொண்டு வரப்பட்டது.

படகில் எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் மற்றும் எண்களைக் கொண்டு அது இலங்கையைச் சேர்ந்த படகு என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் மதிப்பு இந்திய நாணயத்தில் சுமார் 20 இலட்சம் வரை இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். படகில் வலைகள் மட்டுமே உள்ளன என கூறப்படுகிறது.

இலங்கை மீனவர்கள் மீன்பிடிக்க வந்தபோது விபத்து ஏற்பட்டு, படகு அடித்து வரப்பட்டதா? அல்லது யாராவது இந்தப் படகில் அனுமதியின்றி இந்தியாவுக்குள் வந்தார்களா? என்பது குறித்து கடலோரக் காவல் படை மற்றும் கடற்படை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**ராஜீவ்காந்தி கொலை வழக்கில்**

## ரவிச்சந்திரனுக்கு பரோல் மூன்றாவது முறையாக வழங்கல்



ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ள ரவிச்சந்திரனுக்கு மூன்றாவது முறையாக மேலும் ஒரு மாதம் விடுப்பு நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த ரவிச்சந்திரனுக்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி மருத்துவக்காரணங்களுக்காக தமிழக அரசு 30 நாள் விடுப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து, தனது சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சூரப்பநாயக்கன் பட்டியில் அவர் தங்கியுள்ளார். பரோல் முடிந்து மீண்டும் சிறைக்கு செல்ல வேண்டிய நிலையில் அவரது குடும்பத்தினர் கொடுத்த மனுவினடிப்படையில் மூன்றாவது முறையாகவும் நேற்று முதல் அடுத்த மாதம் 16 ஆம் திகதி வரை அவருக்கு விடுப்பு நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

# இன ஐக்கியத்தை வலியுறுத்தி தனி மனிதராக 1,407 கி.மீ. சைக்கிள் ஓடுபவருக்கு கௌரவம்



இன ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு தழுவிய சைக்கிளோட்டத்தை முன்னெடுத்துள்ள அம்பாறை மாவட்டம் பொத்துவில் பகுதியைச் சேர்ந்த சுல்பிகாரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை பிராந்திய செயற்பாட்டாளர் அஹமட் புர்கான் மாலை அணிவித்து உபசரித்து கௌரவமளித்தார்.

நேற்று புதன்கிழமை மாலை மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் வைத்து இக்கௌரவம் அந்தச் சைக்கிளோட்ட வீரருக்கு வழங்கப்பட்டது.

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை (12 ஆம் திகதி) அன்று இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு முழுவதும் தனிநபராக 1,407 கிலோ மீற்றர் சைக்கிள் சவாரியை இவர் கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து ஆரம்பித்திருந்தார்.

சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் சைக்கிள் சவாரி ஆரம்பமாகி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை, பொத்துவில், ஹம்பாந்தோட்டை ஊடாக கொழும்பை சென்றடையவுள்ளது.

நான்காவது நாளான நேற்று இந்த சைக்கிளோட்ட வீரர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை பிராந்திய செயற்பாட்டாளர் அஹமட் புர்கானினால் கௌரவிக்கப்பட்டார். எதிர்காலத்தில் இலங்கையில் நடாத்தப்படவுள்ள தேசிய சைக்கிள் மரதனோட்ட போட்டியில் அவரை இணைத்துக் கொள்வதற்கு ஆவன செய்வேன் என சைக்கிளோட்ட வீரரிடம் வாக்குறுதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சோழர்கால மடத்தடி சிவன் ஆலயத்தில் சிவலிங்க பீடத்திற்கு அடிக்கல் நாட்டல்

### அன்னதான மண்டப அத்திபார வேலையும் ஆரம்பம்



(காரைதீவு நிருபர் சகா)

சோழர்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு தற்போது தூர்ந்து, சிதைந்து, கிடக்கின்ற மடத்தடி சிவன் ஆலய முன்றலில் சிவலிங்கம் நிறுவுவதற்கான பீடமொன்றுக்கு அடிக்கல் நடும் வைபவம் நேற்று பௌர்ணமியன்று நடைபெற்றது.

கூடவே அருகிலுள்ள மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் புதிதாக அம்மன் அன்னதான மண்டபத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடுவிழாவும் நடைபெற்றது.

சிவனருள் பவுண்டேஷன் ஆதரவில் ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம், மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபக இயக்குநர் மு.ஜெயபாலன், சிவனருள் பவுண்டேஷன் மாவட்ட தலைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியை அனுசியா சேனாதிராஜா, மாவட்டச் செயலாளர் கே.வாமதேவன். பொருளாளர் ரி.ஜனார்த்தனன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறிதர், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராஜா, ஆலய பரிபாலனசபை ஆலோசகர்களான வி.ரி.சகாதேவராஜா, வா.குணாளன், வ.ஜெயந்தன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு அடிக்கல் நட்டனர்.

அடிக்கல் நடப்பட்ட பீடத்தில் சிவனருள் பவுண்டேசன் அனுசரணையில் மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபகரும் இயக்குனருமான மு.ஜெயபாலனின் ஏற்பாட்டில் எதிர்வரும் சிவராத்திரியன்று சிவலிங்கம் பிரதிஷ்டை செய்துவைக்கப்படவிருக்கிறது.

இதேவேளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் விசேட பௌர்ணமி பூஜை இடம்பெற்றது. அட்டப்பளம் அறநெறி மாணவர்களின் விசேட பஜனை, பேச்சு, நற்சிந்தனை என்பன இடம்பெற்றன. தொடர்ந்து ஆலய பரிபாலனசபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தலில் ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் அடியார்கள் சங்கமம் பௌர்ணமி ஒன்றுகூடலும் இடம்பெற்றது. கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம் சிறப்புரை நிகழ்த்தினார். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட ஆன்மீக நூல்கள் அங்கு அறநெறி மாணவர்களுக்கும் பிரமுகர்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டன. பௌர்ணமி தினமாகையால் நேற்று பெருந்தொகையான அம்மன் அடியார்களும் கலந்துகொண்டு பொங்கிப்படைத்து அன்னதானம் வழங்கி அம்மனை வழிப்பட்டனர்.



## பொத்துவில் சைக்கிளோட்ட வீரருக்கு மட்டக்களப்பில் மகத்தான வரவேற்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)
மட்டக்களப்பு, பெப்.17

இன ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு தழுவிய சைக்கிளோட்டத்தை முன்னெடுத்துள்ள அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பகுதியை சேர்ந்த 42 வயதுடைய கலந்தார் சுல்பிகார் நேற்று (16 ஆம் திகதி) மட்டக்களப்பு நகரை வந்தடைந்தார். இதன்போது சைக்கிளோட்ட வீரருக்கு மட்டக்களப்பில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு முழுவதும் தனிநபராக 1,407 கிலோ மீற்றர் சைக்கிள் சவாரியை இவர் கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து கடந்த சனிக்கிழமை ஆரம்பித்திருந்தார்.

நான்காவது நாளான நேற்று இந்த சைக்கிளோட்ட வீரர் மட்டக்களப்பு -திருகோணமலை பிரதான வீதி ஊடாக வருகைதந்தபோது மட்டக்களப்பு நகர்பகுதியில் வைத்து மகத்தான பாராட்டும் கௌரவமும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வி.ஈஸ்வரன் தலைமையிலான விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களினால் வரவேற்கும் நிகழ்வு மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாக நடைபெற்றது .

இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு வர்த்தக சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டு வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து கொழும்பில் நிறைவுசெய்யப்படவுள்ள பயணத்திற்கு அவரை வழியனுப்பி வைத்தனர்.

## மீண்டும் காரைதீவில் தடுப்பூசி வழங்கல்





(காரைதீவு நிருபர் சகா)

சுகாதாரத் தொழிலாளர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தின் பின்னர் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று முதல் மீண்டும் மூன்றாவது டோஸ் பைஸர் தடுப்பூசி ஏற்றுகின்ற நிகழ்வு ஆரம்பமானது.

நேற்றைய தினம் 20 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் இந்தத் தடுப்பூசி ஏற்ற வருகை தந்திருந்தனர்.

காலை முதல் மாலை வரை 200க்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார் .

மேலும் இந்த மூன்றாவது தடுப்பூசி தொடர்ச்சியாக தினமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஏற்றப்படும் பொதுமக்கள் தவறாமல் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார வைத்தியதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

# மேற்கிந்தியத் தீவுகளுடனான முதல் ரி-20 போட்டி 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வென்றது




இந்திய - மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான முதலாவது ரி-20 போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றது. இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைச் சேர்த்தது. நிக்கொலஸ் பூரன் 61 ஓட்டங்களைக் குவித்தார். மேயர்ஸ் 31 ஓட்டங்களும், பொலார்ட் 24 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதையடுத்து 158 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான ரோகித் சர்மா 19 பந்துகளில் 40 ஓட்டங்களையும், இஷான் கிஷன் 35 ஓட்டங்களையும் எடுத்தனர். சூர்யகுமார் யாதவும் வெங்கடேஷ் அய்யரும் ஆட்டமிழக்காமல் முறையே 34, 24 ஓட்டங்களை எடுத்து இந்திய அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

இந்திய அணி 7 பந்துகள் மீதமிருந்த நிலையில், 4 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக தனது சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை மேற்கொண்டு முதல் போட்டியிலேயே சிறப்பாகப் பந்துவீசி 2 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய அணியின் இளம் வீரர் ரவி பிஸ்னோய் தெரிவானார்.

3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் இந்தியா 1-0 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி நாளைய தினம் நடைபெறவுள்ளது.

## சீன குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் நோர்வே!



சீனாவில் நடைபெற்றுவரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப்பட்டியலில் நோர்வே முதலிடம் வகிக்கிறது.

ஸ்லோப்ஸ்டைல் எனப்படும் பனியில் சறுக்கிக்கொண்டே பறக்கும் போட்டியில் அமெரிக்க வீரர்கள் அலெக்ஸ் ஹோல் மற்றும் நிகோலஸ் கோப்பர் ஆகியோர் முறையே தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை வென்றனர். சுவீடன் நாட்டின் ஜெஸ்பர் ஜாடர் வெண்கலப் பதக்கம் வென்றார். (- 24 ) பாகை குளிரில் இப்போட்டிகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் ஐஸ் ஹொக்கி போட்டியின்காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவுக்கு அதிர்ச்சியளித்து ஸ்லோவாக்கிய அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. இதன் மூலம் குளிர்கால ஒலிம்பிக் வரலாற்றில் முதல் பதக்கம் வெல்லும் வாய்ப்பை ஸ்லோவாக்கியா நெருங்கியுள்ளது.

ஸ்பீட் ஸ்கேட்டிங் பிரிவில் கனடா அணி அதிர்ஷ்டவசமாக வெற்றியை ஈட்டியது. நடப்பு சம்பியனான ஜப்பானை இறுதிப் போட்டியில் கனடா எதிர்கொண்டது. இதில், இறுதிக்கட்டத்தில் ஜப்பான் வீராங்கனை நாநா தகாகி தவறி விழ நேர்ந்ததால் கனடா எளிதில் தங்கப்பதக்கம் வென்றது. இதுவரை நடந்துள்ள போட் டிகளில் நோர்வே அணி 13 தங்கம் உள்பட 28 பதக்கங்களை வென்று முதலிடத்தில் உள்ளது. ஜேர்மனி இரண்டாவது இடத்திலும் அமெரிக்கா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

## நான் தடுப்பூசிக்கு எதிரானவன் அல்லன் என்கிறார் செர்பியாவின் ஜோகோவிச்



டென்னிஸ் விளையாட்டு உலகின் ஜாம்பவான்களில் ஒருவரான செர்பிய நாட்டைச்சேர்ந்த ஜோகோவிச், கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத காரணத்தினால் அண்மையில் நடந்து முடிந்த ஆஸ்திரேலிய ஓபின் டென்னிஸ் தொடரில் பங்கேற்று விளையாட ஆஸ்திரேலிய நாட்டு அரசு அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் தடுப்பூசி விவகாரத்தில் தனது நிலைப்பாடு என்ன என்பது குறித்து ஜோகோவிச் ஊடகமொன்றில் கருத்தினைப் பகிர்ந்துள்ளார்.

நான் தடுப்பூசிக்கு எதிரானவன் அல்ல. எனக்கும் அது சார்ந்த எந்தவொரு இயக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால், தனியொரு மனிதனுக்கு எது தேவை, தேவையில்லை என்பதைத் தெரிவு செய்வதற்கான உரிமை உள்ளது. எனது உடலில் என்ன செலுத்தவேண்டும் என்ற உரிமை எனக்கு உள்ளது. நான் நீண்ட நாள் விளையாடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆனால், இந்தத் தடுப்பூசி விவகாரத்தினால் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில் நான் பங்கேற்பதையும், கோப்பை வெல்வதையும் தியாகம் செய்ய வேண்டியிருக்கும். அதற்கான விலையைக் கொடுக்கவும் நான் தயார், என தெரிவித்துள்ளார் ஜோகோவிச்.

20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற அவர், இதனை பி.பி.சி. ஊடக நிறுவனத்துடனான பிரத்தியேகப் பேட்டியில் தெரிவித்துள்ளார். உலக மக்கள் அனைவரும் ஒரே புள்ளியில் இணைந்தால் மட்டுமே கொரோனாத் தொற்றிற்கு ஒரு முடிவு காண முடியும் என்றும் அவர்தெரிவித்தார்.

அத்தோடு, எதிர்காலத்தில் தடுப்பூசி செலுத்திக் கொள்வதற்கான சாத்தியக்கூறு குறித்து திறந்த மனநிலையுடன் தான் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்தியா – இலங்கை கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணையில் மாற்றம் அறிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணி, தற்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான தொடர்களில் விளையாடிவருகிறது. இந்தத் தொடர்கள் முடிவடைந்ததும் இலங்கை அணிக்கு எதிராக இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்குபெறவிருக்கிறது.

இந்தத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பெங்களூருவில் பெப்ரவரி 25 ஆம் திகதி முதல் மார்ச் முதலாம் திகதி வரையும், இரண்டாவது டெஸ்ட் மொகாலியில் மார்ச் 5 முதல் 9 வரையிலும், அதன்பின் மார்ச் 13 முதல் மார்ச் 18 ஆம் திகதி வரை மூன்று ரி-20 போட்டிகளும் நடைபெறும் வகையில் போட்டி அட்டவணை அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் டெஸ்ட் போட் டிக்கு முன்னதாக ரி-20 தொடர் நடைபெறும் என இலங்கை மற்றும் இந்திய கிரிக்கெட் சபைகள் அறிவித்துள்ளன.



இந்தப் புதிய அட்டவணையின்படி, இம்மாதம் 24 ஆம் திகதி லக்னோவில் முதலாவது ரி-20 போட்டியும், அடுத்த இரு போட் டிகளும் 26, 27 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன. மார்ச் 4 ஆம் திகதி முதலாவது டெஸ்ட் போட்டி மொகாலியிலும், மார்ச் 12 இல் பெங்களூருவில் இரண்டாவது டெஸ்ட் போட்டியும் நடத்தப் படவுள்ளன.

# ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு அவசியம்!



ஜனநாயக சமூகத்தை உறுதிப்படுத்த ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க வேண்டும் என

## ஐ.நா. மீண்டும் வலியுறுத்து

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், ஜனநாயக சமூகத்தை உறுதி செய்வதில் ஊடகவியலாளர்கள் அடிப்படைப் பங்காற்றுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

கருத்துச் சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கு அவர்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் விமர்சனக் குரல்களை மௌனமாக்குவது, பொது விவாதம், சுதந்திரம் மற்றும் அனைவரின் மனித உரிமைகளையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 'அமாதம் சிசிலச' நிகழ்வில் பங்கேற்றார் மஹிந்த!



பிரதமர்மஹிந்தராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கு அமைய அனைத்து பௌர்ணமி தினங்களிலும் நடத்தப்படும் அமாதம் சிசிலச தர்ம உபதேசத் தொடரின் 219 ஆவது தர்ம உபதேசம் நேற்று (புதன்கிழமை) அலரி மாளிகையில் நடைபெற்றது.

வழிபாட்டில் ஈடுபட்டதை தொடர்ந்து பிரதமர் தர்ம உபதேசம் நிகழ்த்துவதற்காக வருகைதந்த மஹவ, இபலோகம ஸ்ரீ போதிருக்காராமதிகாரி, இலங்கையின் பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் முதுகலை கற்கைநெறி பீட பீடாதிபதி பேராசிரியர் வணக்கத்திற்குரிய மொரகொல்லாகம உபரதன தேரரை வரவேற்றார்.

பௌத்த மதத்தினூடாக கிடைக்கும் மன அமைதியை உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்கப்பெறச் செய்யும் உன்னத நோக்கத்தில் இந்த தர்ம உபதேசத் தொடர் நடத்தப்பட்டு வருகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அமாதம் சிசிலச தர்ம உபதேசத் தொடர் தொடர்ச்சியாக சகல பௌர்ணமி தினங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றமையை பாராட்டி அதன் மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தை வணக்கத்துக்குரிய தேரர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இந்த பௌர்ணமி தினத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் உபதேசகரான வணக்கத்திற்குரிய தேரர் வலியுறுத்தினார்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நம் நாட்டில் பெரும் சபிக்கப்பட்ட யுத்தம் நடைபெற்றது. அப்போதைய ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நாட்டின் சகல இராணுவத்தினரதும் ஒத்துழைப்புடன் இந்த நாட்டின் அனைத்து மக்களின் ஆசியுடன் மாபெரும் யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், இந்த போர் படுகொலை அல்ல. மக்களை பாதுகாத்து மனிதாபிமான அடிப்படையில் இந்த போர் நடத்தப்பட்டது.

நாம் அனைவரும் அவர்களை நன்றியுடன் நினைவுகூருகிறோம். இந்நாட்டு மக்கள் இன்று போன்ற பௌர்ணமி தினத்தில் சுதந்திரமாக வழிபாட்டில் ஈடுபடுகின்றமை, நாட்டில் பயணிப்பது அன்று சிறந்த தலைமைத்துவத்துடன் செயற்பட்ட எமது ஜனாதிபதியாலேயே ஆகும் என தனது உபதேசத்தில் வணக்கத்திற்குரிய தேரர் சுட்டிக்காட்டினார்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய நடைபெற்ற அமாதம் சிசிலச தர்ம உபதேச நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரின் பாரியார் ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ உள்ளிட்ட கலைஞர்கள், தாதியர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலஞ்ச ஊழல் வழக்கிலிருந்து அமைச்சர் கெஹலிய விடுதலை



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு தேவைப்படாத சந்தர்ப்பத்தில், மேம்பாட்டு செயற்றிட்டம் ஒன்றுக்காக 600 ஜி.ஐ. குழாய்களை கொள்வனவு செய்தமை ஊடாக அரசுக்கு 9 லட்சத்து 90 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்படுத்தினார் என முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் தற்போதைய சுகாதார அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த ஊழல் மோசடி வழக்கிலிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் விமலசேன ரூபசிங்க மற்றும் அந்தத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சந்ரபால லியனகே ஆகிய மூவரையுமே இவ்வாறு விடுவித்து கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சி. ராகல உத்தரவிட்டார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டு செயற்றிட்டம் ஒன்றுக்காக , ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு தேவைப்படாத போது 600 ஜி.ஐ. குழாய்களை கொள்வ னவு செய்தமை ஊடாக அர சுக்கு 9 லட்சத்து 90 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்படுத்தியதனூடாக லஞ்ச ஊழல் சட்டத்தின் 70 ஆம் அத்தியாயம் பிரகாரம் குற்றம் ஒன்றை இழைத்துள்ளதாக மூவருக்கும் எதிராக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

கடந்த 2015 ஏப்ரல் 22 ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு இது தொடர்பில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தது.

இது தொடர்பில் 24 சாட்சியாளர்களையும் 15 வழக்குப் பொருள்களையும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு பட்டியலிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, குறித்த வழக்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் 3 ஆணையாளர்களினதும் எழுத்து மூல அனுமதியின்றி தொடரப்பட்டுள்ளதாகவும், அதனால் மீள வழக்குத் தாக்கல் செய்யும் நிபந்தனையின் கீழ் வழக்கை வாபஸ் பெற அனுமதிக்குமாறும் இலஞ்ச ஊழல் விசரணை ஆணைக் குழுவினர் நீதிமன்றைக் கோரினர்.

இந்நிலையில் விடயங்களை ஆராய்ந்த கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சி ராகல, மீள வழக்குத் தாக்கல் செய்ய முடியும் எனும் நிபந்தனையின் கீழ், குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை விதிவிதானங்களுக்கு அமைய வழக்கை வாபஸ் பெற அனுமதித்து பிரதிவாதிகள் மூவரையும் விடுதலை செய்தார்.



# இன, மத பிளவுகளை உருவாக்க வேண்டாம்!

## மனோ கணேசன் உருக்கம்

ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கையை உண்மையாக ஏற்றுக்கொண்டால், நாட்டை இனம் மற்றும் மதத்தின் அடிப்படையில் பிரிக்க வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி கொழும்பில் கைழுத்து போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்டு கையொப்பம் இட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற கருத்தின் கீழ் நாட்டைக் கொண்டு வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்தின் கீழ் இந்த நாட்டை அரசாங்கம் கொண்டு வர முடிந்தால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளலாம் என்றும் ஆனால் தற்போது சிங்கள சமூகத்துக்கென தனிச் சட்டம், தமிழ், முஸ்லிம் சமூகத்துக்கென தனிச் சட்டம் உள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

எனவே, இனம், மதம் மற்றும் மாகாண அடிப்படையில் மக்களை நடத்தி நாட்டை பிளவுபடுத்த வேண்டாம் என அவர் இதன்போது அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு!

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

கிளிநொச்சியில் நேற்று (புதன்கிழமை) காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி இந்த அழைப்பை விடுத்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் -

வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்து எதிர்வரும் 20 ஆம் திகதி ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. இலங்கை அரசிடம் தீர்வு கோரி கிடைக்காத நிலையில் சர்வதேசத்திடம் நீதி கேட்டு நாங்கள் போராடி வருகின்றோம்.

இந்த நிலையில் அன்றைய நாளன்று மாபெரும் பேரணி ஒன்றை மேற்கொள்வதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அன்றைய தினம் கடந்த காலங்களில் நாங்கள் போராட்டங்களை மேற்கொள்கின்றபோது இருந்த ஒத்துழைப்புக்களைப் போன்று கிராம மட்ட அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், ஓட்டோ உரிமையாளர் சங்கம், தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்றவர்கள், அரசியல்வாதிகள், அரசியலிற்கு அப்பால் நின்று செயற்படுகின்றவர்கள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்த ஊடகங்கள் வாயிலாக முன்வைக்கின்றோம். வடக்கு கிழக்கில் இருக்கின்ற அனைத்து தரப்பினரும் இந்த அழைப்பை ஏற்று அன்றைய தினத்தில் இடம்பெறும் மாபெரும் பேரணியில் கலந்துகொண்டு ஆதரவை வழங்க வேண்டும் - என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.02.2022இல் வெளியிடப்பெற்றது.